# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/31 - 2014 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2014.02.28

*1851/31 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 123/48*(iii)

**மருத்துவக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 105)**

*(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 19(இ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மருத்துவப் பேரவையின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிரிசேன,
சுகாதார அமைச்சர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு,
2014.02.26.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவப் பேரவை (பதிவாளர் நியமனம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பதிவாளரின் பதவி வெற்றிடமாக வருவதன் மேல் (இதனகத்துப்பின்னர் ''மருத்துவப் பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மருத்துவப் பேரவை சிங்களம், தமிழ், ஆங்கில நாளாந்தப் பத்திரிகையொன்றில் வெளியிடப்படும் விளம்பரம் ஒன்றின் மூலம் இவ்வொழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படும் தகைமைகளைக் கொண்ட ஆட்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருதல் வேண்டும்.

3 (1) இரண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்துக்கிணங்க விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் -

(அ) மருத்துவத்தில் இளமாணிப் பட்டமொன்றைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ; முன்னுரிமையானது மருத்துவம் தொடர்புபட்ட ஏதேனும் துறையில் பட்டப்பின்படிப்புத் தகைமையை வைத்திருக்கும் எவரேனும் ஆளுக்கு வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) பகிரங்கத் துறையின் மருத்துவ அலுவலரொருவராக ஆகக்குறைந்தது இருபத்தைந்து ஆண்டுகள் அனுபவம் கொண்டிருப்பதுடன் இருபத்தைந்து ஆண்டுகள் அனுபவத்தில் அவர் நிர்வாகத் துறையில் ஆகக் குறைந்தது ஐந்து ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) நியமனத் திகதியன்று நாற்பத்தைந்து வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆளொவ்வொருவரும் சிறந்த ஒழுக்கக் குணநலத்தையும் தெளிவான தொழில் பதிவேடுகளையும் கொண்டுள்ள ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) பதிவாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் பதிவாளர் பதவியின் கடமைகளுடன் மருத்துவ பேரவையின் செயற்பாடுகளுடனும் ஏதேனும் முரண்பாடான அக்கறை கொண்டிருத்தலோ அல்லது நீதிமன்றமொன்றினால் ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தலோ அல்லது மருத்துவப் பேரவையினால் ஏதேனும் உயர்தொழில் தவறான நடத்தைக்காக தண்டிக்கப்பட்டிருத்தலோ ஆகாது.

4. (1) தெரிவானது, நேர்முகப் பரீட்சைச் சபையின் தவிசாளராக இருக்க வேண்டிய மருத்துவப் பேரவையின் தலைவர், சுகாதார சேவையின் பணிப்பாளர் தலைமையதிபதி, மருத்துவப் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய மருத்துவப் பேரவையின் இரு உறுப்பினர்கள் மற்றும் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளொருவரைக் கொண்டமைந்த நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) நேர்முகப் பரீட்சைச் சபையின் பதிவாளராக நியமிக்கப்படுவதற்கு மருத்துவப் பேரவைக்கு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரரை சிபார்சு செய்தல் வேண்டும்.

5. பதிவாளரின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்: -

(அ) மருத்துவப் பேரவைக்கான செயலாளராகச் செயற்படுதல் ;

(ஆ) மருத்துவப் பேரவையின் அலுவல்களை முகாமை செய்வதுடன் மருத்துவப் பேரவை சார்பில் அறிவித்தல்களை வழங்குவதுடன் எல்லாத் தொடர்பாடல் வேலைகளையும் நிறைவேற்றுதலும் ;

(இ) மருத்துவப் பேரவை புதிய பொருளாளர் ஒருவரை நியமிக்கும் அத்தகைய காலம்வரை மருத்துவப் பேரவையின் பொருளாளராகச் செயலாற்றுதல் ;

(ஈ) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி மருத்துவ அலுவலர்கள், பல் வைத்தியர்கள், மருத்துவிச்சிகள் மற்றும் மருந்தாளர்களின் பதிவேடுகளைப் பேணுதல் ;

(உ) மருத்துவப் பேரவையின் கூட்டங்களைக் கூட்டுவதுடன் அதன் நடவடிக்கை முறைகளின் கூட்டக் குறிப்புகளைப் பேணுதலும்;

(ஊ) மருத்துவப் பேரவையின் பணியாட்டொகுதி மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுத் தீர்மானங்கள் உட்பட மருத்துவப் பேரவையின் எல்லா நிருவாகத் தீர்மானங்களையும் நிறைவேற்றுதல் ; அத்துடன்

(எ) மருத்துவப் பேரவையினால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடியவாறான எல்லா அத்தகைய வேறு கடமைகளையும் புரிதல் ;

6. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளர் முன்னராக பதவி நீங்கினால் அல்லது பதவியை வெற்றிடமாக்கினாலொழிய, மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் இரண்டாம் தவணையொன்றுக்காக மீள நியமிக்கவும் படலாம். எவ்வாறாயினும் ஆளொருவர் 6 (ஆறு) வருடங்களுக்கு மேலதிகமாக இப்பதவிக்கு அமர்த்தப்படலாகாது. (இரண்டு தவணைகள்)

7. ஏதேனும் சம்பளம் அல்லது வேறு ஊதியங்களின் கொடுப்பனவு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய மருத்துவப் பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

8. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட பதிவாளர் கேட்பதற்கான சந்தர்ப்பம் ஒன்று அளிக்கப்பட்டதன் பின்னர் கடமையின் பாரிய தவறுதல் அல்லது ஏதேனும் கடுமையான தவறான நடத்தைக்காக அல்லது தகைமையீனத்துக்காக நிறுத்தி வைக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

9. பதிவாளரின் பதவி பின்வரும் சந்தர்ப்பங்களில் வெற்றிடமாக வருதல் வேண்டும்.

(அ) அறுபது வயதை அடைந்ததன் மேல் அல்லது பதவிக்காலம் முடிவடைந்தவிடத்து;

(ஆ) அவரது இறப்பின் மேல் ;

(இ) மருத்துவப் பேரவையின் தலைவருக்கு முகவரியிடப்பட்டு எழுத்தில் தான் பதவிநீங்கியதன் மீது, அல்லது

(ஈ) மருத்துவப் பேரவையினால் பதவி நீக்கப்பட்டதன் மேல்.

10. இவ்வொழுங்கு விதியின் நோக்கங்களுக்காக -

"மருத்துவப் பேரவை" என்பது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவை எனப் பொருள்படும்; அத்துடன்

"அமைச்சர்' என்பது சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

11. 1929, ஓகத்து 9 ஆந் திகதிய 7727 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை மருத்துவப் பேரவையின் நிலையியற் கட்டளைகளின் 9 ஆம் அத்தியாயம் இத்தால் நீக்கம் செய்யப்படுகின்றது.

3-338

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.